## உங்கள் எண்ணத்தை எடுத்துரைக்கவும் ... வாக்களிக்கவும்!

ஏன் வாக்களிக்க வேண்டும்?

அது உங்கள் உரிமை,

உங்கள் தெரிவு,

உங்கள் எதிர்காலம்.

### வாக்களிப்பதற்கு, நீங்கள்:

- கனடியப் பிரசையாக விளங்க வேண்டும்
- தேர்தல் நாளில் ஆக்க்குறைந்த்து 18 வயதுடயவராக விளங்க வேண்டும்
- உங்கள் ஆளடையாளத்தையும், முகவரியையும் நிரூபிக்க வேண்டும்

### ஏன் வாக்களிக்க வேண்டும்?

மக்களாட்சியை இயங்க வைப்பது வாக்களிப்பே. கனடிய நாடாளுமன்றத்தில் உங்கள் தரப்பை எடுத்துரைப்பதற்கு ஒருவரை நீங்கள் தேர்ந்தெடுக்கும் முறை அதுவே. அவ்வாறு தேர்ந்தெடுப்பதன் மூலம் உங்கள் மக்களாட்சி உரிமைகளுள் ஒன்றை நீங்கள் நிலைநாட்டுகிறீர்கள்.

### தேர்தல் எல்லாம் எதைப் பற்றியது?

ஒரு தேர்தலின்பொழுது உங்கள் தொகுதியில் (தேர்தல் மாவட்டத்தில்) உங்கள் தெரிவின்படி ஒரு வேட்பாளருக்கு நீங்கள் வாக்களிக்கிறீர்கள். அதிகப்படியான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். அதன் பின்னர் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். எந்த அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் அதிகப்படியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்த அரசியல் கட்சியே அரசாங்கத்தை அமைக்கும் .

### நீங்கள் அறியவேண்டிய சொற்கள்

**கனடா தேர்தல் திணைக்களம்** என்பது கனடாவில் மத்திய அரச தேர்தல்களை நடத்துவதற்காக நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சுதந்திர அமைப்பு.

**தேர்வாளர்** என்பவர் தேர்தல் நாளில் ஆகக்குறைந்தது 18 வயதுடைய ஒரு கனடியப் பிரசை. தேர்வாளர் என்பவர் வாக்களிக்கும் உரிமையுடையவர். அவர் **வாக்காளர்** எனப்படுவதும் உண்டு.

தேர்ந்தெடுக்கப்பட விரும்புவோர் **வேட்பாளர்கள்** எனப்படுவர்.

வாக்களிக்கப் பதிவுசெய்த தேர்வாளர்கள் அனைவரின் பெயர்களையும் **வாக்காளர் நிரல்** காட்டும்.

உங்கள் **வாக்காளர் தகவல் அட்டையை** நீங்கள் அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் பெயர் வாக்காளர் நிரலில் இருக்கிறது என்பதை அது உறுதிப்படுத்துகிறது. நீங்கள் எங்கே, எப்பொழுது வாக்களிக்கலாம் என்பதையும் அது தெரிவிக்கும்.

நீங்கள் வாக்களிக்கச் செல்லும் இடம் **வாக்களிப்பு நிலையம்** எனப்படும்.
நீங்கள் வாக்களிக்கப் பயன்படுத்தும் தாள் **வாக்குத்துண்டு** எனப்படும். உங்கள் தொகுதியின் வேட்பாளர்கள் அனைவரின் பெயர்களும் அதில் பொறிக்கப்பட்டிருக்கும்.

உங்களிடம் வாக்குத்துண்டு தருபவர் **பிரதித் தேர்தல் அதிகாரி** எனப்படுவார்.

நீங்கள் வாக்களித்துவிட்டீர்கள் என்பதைக் காட்டுவதற்காக வாக்காளர் நிரலில் உங்கள் பெயரைக் கீறுபவர் **வாக்களிப்பு எழுதுநர்** எனப்படுவார்.

நீங்கள் வாக்களிக்கும் பொருட்டு அடையாளமிடச் செல்லும் தனியிடம் **வாக்களிப்புத் திரைமறைவிடம்** எனப்படும். கனடாவில் **இரகசிய வாக்கு** மூலமே வாக்களிப்பு இடம்பெறும்.

உங்கள் வாக்கை நீங்கள் இடும் பெட்டி **வாக்குப் பெட்டி** எனப்படும்.

முக்கியம்

**நீங்கள் வாக்களிக்கும்பொழுது உங்கள் அடையாளத்தையும், முகவரியையும் நிரூபிக்க வேண்டும். அதற்கு மூன்று தெரிவுகள் உள்ளன:**

- உங்கள் நிழற்படம், பெயர், முகவரி கொண்ட மூல அடையாள ஆவணம் ஒன்றைக் காட்டவும். அது ஓர் அரசாங்க அலுவலகத்தால் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டு: உங்கள் சாரதி உரிமம்.

**அல்லது**

- அத்தாட்சிப்படுத்தப்பட்ட மூல அடையாள ஆவணங்கள் இரண்டைக் காட்டவும். இரண்டு ஆவணங்களும் உங்கள் பெயரைக் கொண்டிருக்க வேண்டும். ஒன்றில் உங்கள் முகவரி இடம்பெற்றிருக்க வேண்டும். எடுத்துக்காட்டு: உங்கள் சுகாதார அட்டையும் மின்சாரக் கட்டணச் சீட்டும்

**அல்லது**

- சத்தியப் பிரமாணம் செய்யவும். உங்களை அறிந்த தேர்வாளர் ஒருவர் உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கும்படி செய்யவும். அவரிடம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் இருக்க வேண்டும். நீங்கள் வாக்களிக்கும் அதே குறிச்சியைச் சேர்ந்தவராகவும் அவர் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டு: உங்கள் அயலவர் அல்லது அறைக்கூட்டாளி ஒருவர் (ஒரு தேர்வாளர் ஒரு வாக்காளருக்கு மாத்திரமே உத்தரவாதம் அளிக்கலாம். உத்தரவாதம் அளிக்கப்பட்டவர் வேறொருவருக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது).

| |
|---|
| அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணங்களின் நிரலுக்கு நாடவும்: www.elections.ca. |

## உங்கள் வாக்காளர் தகவல் அட்டை கிடைத்ததா?

நீங்கள் வாக்களிப்பதற்கு, உங்கள் பெயர் கனடா தேர்தல் திணைக்களத்து **வாக்காளர் நிரலில்** இடம்பெற்றிருக்க வேண்டும். ஏற்கெனவே உங்கள் பெயரும், சரியான முகவரியும் வாக்காளர் நிரலில் இடம்பெற்றிருந்தால், தேர்தல் நடவடிக்கை தொடங்கியவுடன் ஒரு **வாக்காளர் தகவல் அட்டை** உங்களுக்கு அஞ்சலில் கிடைக்கும். நீங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்பதையும், நீங்கள் எங்கே, எப்பொழுது வாக்களிக்கலாம் என்பதையும் அது தெரிவிக்கும்.

அட்டையில் உள்ள பெயரும் முகவரியும் **சரியில்லை** என்றால், உங்கள் உள்ளூரில் உள்ள கனடா தேர்தல் அலுவலகத்தை அழைக்கவும். அதற்குரிய இலக்கம் இந்த அட்டையின் புறத்தில் காணப்படுகிறது.

உங்கள் வாக்காளர் தகவல் அட்டை உங்களுக்கு **கிடைக்காவிட்டால்,** கனடா தேர்தல் திணைக்களத்தை அழைக்கவும்: 1-800-463-6868. நீங்கள் பதிவுசெய்து, வாக்களிக்கும் விதத்தை அவர்கள் உங்களிடம் தெரிவிப்பார்கள்.

**தகுந்த ஆவணங்களுடன் நீங்கள் வாக்களிக்கும் பொழுதே பதிவுசெய்யலாம்.**

## வாக்களிக்கும் விதம்

**மூன்றில் ஒரு விதப்படி நீங்கள் வாக்களிக்கலாம்:**

### நீங்கள் தேர்தல் நாளில் நேரில் வாக்களிக்கலாம்

தேர்தல் நாளில் உங்கள் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிக்கவும். வாக்களிப்பு நிலையத்தின் முகவரியும், அது திறக்கும் நேரமும் உங்கள் வாக்காளர் தகவல் அட்டையில் காணப்படும்.

### சிறப்பு வாக்குத்துண்டு மூலம் நீங்கள் வாக்களிக்கலாம்

நீங்கள் சிறப்பு வாக்குத்துண்டைப் பயனபடுத்தி அஞ்சல் மூலம் அல்லது உங்கள் உள்ளூரில் உள்ள கனடா தேர்தல் அலுவலகத்தில் வாக்களிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு கனடா தேர்தல் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளவும்.

### நீங்கள் முன்கூட்டியே வாக்களிக்கலாம்

நீங்கள் முன்கூட்டியே வாக்களிக்கும் இடத்தையும், நேரத்தையும், உங்கள் வாக்காளர் தகவல் அட்டையில் பார்த்து, அல்லது கனடா தேர்தல் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு அறியலாம்.

## வாக்களிப்பு நிலையத்தில்

தகவல் அதிகாரி உங்களை வரவேற்று, நீங்கள் வாக்களிக்கச் செல்லவேண்டிய இடத்தைக் காட்டுவார்.

ஒரு மேசை போட்டிருக்கும் தேர்தல் அதிகாரிகள்: பிரதித் தேர்தல் அதிகாரி, வாக்களிப்பு எழுதுநர்.

உங்கள் ஆளடையாளத்தையும், முகவரியையும் நிரூபிக்கும்படி பிரதித் தேர்தல் அதிகாரி கேட்பார். உங்களிடம் சரியான ஆவணங்கள் இல்லாவிட்டால், நீங்கள் சத்தியப் பிரமாணம் செய்து, ஏற்கெனவே உங்கள் வாக்களிப்பு நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட வேறொரு தேர்வாளரைக் கொண்டு உங்களுக்கு உத்தரவாதம் கொடுக்கச்செய்து வாக்களிக்கலாம்.

உங்கள் பெயர் வாக்காளர் நிரலில் இருக்கிறதா என்று வாக்களிப்பு எழுதுநர் பார்ப்பார். உங்கள் பெயர் வாக்காளர் நிரலில் இல்லை என்றாலும், நீங்கள் பதிவுசெய்யலாம்.

வாக்களிப்பு எழுதுநர் வாக்காளர் நிரலில் உங்கள் பெயருக்கு அடையாளமிடுவார்.

பிரதித் தேர்தல் அதிகாரி உங்களிடம் ஒரு வாக்குத்துண்டை மடித்துத் தருவார். நீங்கள் வாக்குத்துண்டில் அடையாளமிடச் சிரமப்பட்டால், அவரால் உங்களுக்கு உதவ முடியும்.

நீங்கள் திரைமறைவிடம் சென்று வாக்களிக்கலாம். நீங்கள் யாருக்கு வாக்களிக்கிறீர்கள் என்பதை எவரும் பார்க்க முடியாது.

நீங்கள் தெரிவுசெய்யும் வேட்பாளரின் பெயருக்கு எதிரே உள்ள வட்டத்தில் புள்ளடி (X) இடவும்.

உங்கள் வாக்குத்துண்டை மடித்து, உங்கள் வாக்கின் இரகசியம் காக்கவும்.

நீங்கள் மடித்த வாக்குத்துண்டை திரும்பவும் கொண்டுசென்று பிரதித் தேர்தல் அதிகாரியிடம் கொடுக்கவும். அதன் அடிக்கட்டையை அவர் கிழித்தெடுப்பார்.

பிரதித் தேர்தல் அதிகாரி உங்கள் வாக்குத்துண்டை திரும்பவும் உங்களிடம் தருவார். நீங்கள் அதனைப் பெற்று வாக்குப் பெட்டியில் இடவும்.

இச்சிற்றேடு அவரவர் தாய்மொழிகளிலும், தொல்குடி மொழிகளிலும் கிடைக்கும்.

**மேலதிக விபரங்களுக்கு நாடவும்:**
**www.elections.ca**
**1-800-463-6868**

TTY 1-800-361-8935 (செவிப்புலன் அற்றவர்களுக்கு அல்லது குன்றியவர்களுக்கு)

EC 90239 (08/09)

Elections Canada